# தினசரி வழிபாட்டு முறை



# 6. ஸ்ரீ ஞானாம்பிகை திருப்பள்ளியெழுச்சி

தூங்கிய கங்கை எழுந்தது தெய்வப் பொலிவு தழைத்திடவே
செங்கதிரோனும் உதயகிரிக்கண் சேரவரும் தருணம்
மங்களகீதம் முழங்கியதெங்கும் மந்திரம் ஓங்கின காண்
பங்கஜ லோசனி ஶங்கரியே நீ பள்ளி யெழுந்தருள்வாய் !
பார் முழுதும் ஶிவ பரிமளமோங்கப் பள்ளி யெழுந்தருள்வாய் !
பங்கஜ லோசனி ஶங்கரியே நீ பள்ளி யெழுந்தருள்வாய் ! 1

தேவரும் முனிவரும் திரளாய் வந்து திருப்பணி புரிகின்றார்
ஆவலுடன் நின தரண்மனை வாயிலில் அரசரும் நிற்கின்றார்
சேவல் எழுந்தது சங்கொடு துந்துபி ஜெய ஜெய என்பதுகாண்
பாவனி கௌரி பவானி மஹேஶ்வரி பள்ளி யெழுந்தருள்வாய் ! 2

சஞ்சல இரவு முடிந்தது ஸமரஸ ஶாந்த ஸமாதியினுள்
மஞ்சுள வனஜம் மலர்ந்தது ஹம்ஸ மனோஹர வாரியிலே
விஞ்சிய இன்பம் மிதந்து தவழ்ந்தது வேதமிசைப்பது காண்
பஞ்ச மனோபவ ரூபிணி பகவதி பள்ளி யெழுந்தருள்வாய் ! 3

முருகனும் மதகஜ வதனனும் நின்திரு முன்வர வருகின்றார்
அருளலைப் போல் ஹரஹரயெனும் அடியவர் அவர் பின்னர் வருகின்றார்
தருமம் தழைய தவமுறை வளர தரணி விளங்கிடவே
பருகிய கருணை பெருகவுமினி நீ பள்ளி யெழுந்தருள்வாய் ! 4